1970 மார்ச் 13]

நிலவள வங்கிகளிலிருந்து கடன் பெறுதல்

*** 365 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நில அடமான வங்கிகளின் மூலம் கடன் பெறுவதில் அதிகக் காலதாமதம் ஏற்படுவதாக அரசுக்கு மக்களிடமிருந்து முறையீடு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனின், காலதாமதத்தைத் தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னென்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) விவசாயிகளிடமிருந்து ரூ. 10,000-த்திற்கும் அதற்குக் குறைவாகவும் கடன் வேண்டிவரும் மனுக்கள் 30 நாட்களுக்குள்ளாகவும் ரூ. 10,000-க்கு மேற்பட்டுக் கடன் கேட்டு வரும் மனுக்கள் 33 நாட்களுக்குள்ளாகவும் முடிவு செய்யப்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, கட்டளைகளைப் பிறப்பித்திருக்கிறீர்களே தவிர, மாதக்கணக்காக பைல் கட்டுகளை வாங்குவதில், ஈ.ஓ. (கோ ஆபரேஷன்), டி. ஆர். மூலம் வருவதில் பணிகளில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறதா ? இது சம்பந்தமாக வங்கி ஊழியர்களுக்கு உத்தரவு இடுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கடன் வழங்குவதில் காலதாமதம் சம்பந்தப்பட்ட வரையில், வட்டார வங்கிதான் பொறுப்பு. அரசோ, மத்திய அடைமான வங்கியோ பொறுப்பு அல்ல. காரணம் என்னவென்றால், 19-1-70 அன்று மத்திய நிலவள வங்கியில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது. எதிர்பார்பதற்கு அதிகமான கடன் வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதால், வட்டார நில அடைமான வங்கிகள் அவர்களுக்குத் தேவை என்கிற தொகைகளை லிமிட் இல்லாமல், குறியீடு இல்லாமல் பெற்று, விவசாயிகளுக்கு விரைவில் வழங்க வேண்டும் என்று சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது, மாண்புமிகு திரு. சித்தன் அவர்களைத் தலைவராகவும், மதிப்பிற்குரிய அவருடைய தந்தை அவர்களைத் தலைவராகவும் கொண்டு நடந்து வந்த, வருகிற நில அடைமான வங்கிக்கு, கடந்த 8 மாதத்தில் 5 லட்ச ரூபாய்க்கு மேல் பணம் அனுப்பியுள்ளோம் இன்னும் நேற்று மத்திய அரசின் சம்மதம் கிடைத்ததன் மூலம் 1¼ கோடி அளவிற்கு மத்திய நில அடைமான வங்கி, வட்டார வங்கிகள் இவற்றிற்கு கிடைக்கும். மாண்புமிகு சித்தன் அவர்கள், எதாவது மேற்கொண்டு விவசாயிகளுக்குக் கொடுக்க வங்கிகளுக்குப் பணம் தேவையென்றால் உடனடியாகத் தேவைப்படும் அளவிற்கு வரம்பு இல்லாமல் பெற்றுக் கொள்ளலாம். (சிரிப்பு)

திரு. இரா. சௌந்தராஜ மூப்பனார் : தலைவர் அவர்களே, விவசாய பம்பு செட்டுகளுக்கு 1968-69-ல் கொடுக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு, 1969-70-ல் எவ்வளவு? குறைவு இருந்தால் அதற்கான காரணம் என்ன, அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன, என்பவற்றைத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, பம்பு செட்டுக்கு, கிணற்றுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதற்கு கணக்கு கைவசம் இல்லை. ஆனால், மொத்தம் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதற்கு கணக்கு இருக்கிறது. 1966–67-ல் மொத்தம் விவசாயிகளுக்கு, மத்திய நில அடைமான வங்கி, வட்டார வங்கிகள் மூலம் கொடுக்கப்பட்டது 3 கோடி ரூபாய். இந்த வருஷம், 1969-70-ல் வழங்கப்படுவது 16½ கோடி ரூபாய்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister how many applications have been disposed of within the number of days prescribed, viz., 30 days and 33 days?

THE HON. THIRU SI. PA. ADITANAR : The disposal of the applications is done at the primary level. Everything depends upon how quickly the primary banks dispose of the applications. What the Government does is to guarantee the amount and send the money over to the State Land Development Bank. We have already arranged to send this year Rs. $16\frac{1}{2}$ crores. There is not enough offtake from the primary land development banks. If our learned friend will use his influence and ask the primary banks to utilise those moneys, it will be possible to distribute the moneys in hand now.

வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்திய நிலங்கள்

■366 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) State Housing Board சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்த பிறகு, அதை எதிர்த்து நீதி மன்றங்களில் நிலச் சொந்தக்காரர்கள் வழக்குப் போட்டிருக் கின்றனரா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர் ?

(உ) வழக்கு மன்றங்களில் நிலச் சொந்தக்காரர்களுக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(எ) அந்த தீர்ப்புகளை எதிர்த்து அப்பீல் செய்யப்பட் டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) 274 வழக்குகள்.

(உ) 13 வழக்குகள்.